<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண்.168/2023 நாள்: 11.02.2026 வா.சா.3 – முத்துராமசந்திரமூர்த்தி**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை -</u>**
எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வாதி அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு தற்போது சுமார் 40 வயதிருக்கும். பிரதிவாதியின் தந்தை பெயர் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆன கடனுறுதி சீட்டில் பிரதிவாதியின் தந்தை பெயர் எழுதவில்லை. வா.சா.ஆ.1 ஆன கடனுறுதி சீட்டை கண்ணன் என்ற எழுத்தர் எழுதினார். மேற்படி கண்ணனை யார் அழைத்து வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. வாதி பிரதிவாதிக்கு ரூ.15 லட்சத்தை 500 ரூபாய் நோட்டுகளாக கொடுத்தார். எப்போது பிரதிவாதி வாதியிடம் பணம் கடனாக கேட்டார் என்று எனக்கு தெரியாது. கடனுறுதி சீட்டை கண்ணன் தான் எழுதினார், என்ன பேனாவால் எழுதினார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. பிரதிவாதி எந்த பேனாவால் கையொப்பம் போட்டார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் எந்த பேனாவால் சாட்சி கையொப்பம் போட்டேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் சாட்சி கையொப்பம் இட்ட கடனுறுதி சீட்டில் அடித்தல், திருத்தல் இருந்ததா என்றால் இல்லை. எனது சொந்த ஊர் வேடப்பட்டி. மேற்படி ரூ.15 லட்சம் தொகைக்கு ஒரு ரூபாய் வட்டி என்று எழுதி கொண்டார்கள். கடனுறுதி சீட்டில் முதல் கையொப்பத்தை முத்துராயப்பன் போட்டார், 2 கையொப்பம் போட்டார். முத்துராயப்பனின் ரேகைக்கு கீழ் முத்துராயப்பன் பெயர் எழுதப்பட்டதா என்றால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். கடனுறுதி சீட்டில் அடித்தல், திருத்தல் எழுதப்பட்டுள்ளது என்றும், நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டில்

என்னுடைய முகவரி பென்சிலால் எழுதப்பட்டு, அதற்கு மேல் பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி வாதியிடம் ஒரு போதும் ரூ.15 லட்சம் கடன் வாங்கவில்லை என்றும், என்னையும் மற்ற சாட்சிகளையும் வாதியை பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரியல்ல. வாதிக்கு உறவினர் என்பதால் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.02.11 16:59:23 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.